

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம், புதுவாயல் கிராமத்தில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பிர் டி ஜெ கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பங்கேற்று வடகிழக்கு பருமழை முன்னெச்சரிக்கை எற்பாடுகள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகள் கிராம ஊராட்சியின் 2024 2025 வரவு செலவு தணிக்கை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார். உடன் எஸ்.ரமேஷ். மு.பாஸ்கர், இரா.அறிவழகன், கே.ஜிநமச்சிவாயம், பசுரேஷ் கே.வி நாகராஜ். பாபரத்குமார். மற்றும் அரசு துறை அதிகாரிகள் உட்பட பலர் பங்கேற்றனர்

### கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கும் தீபாவளி போனஸ்

# அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும்!

## புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுச்சேரி, அக். 13 –

புதுச்சேரி அரசு இந்த ஆண்டு கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கும் தீபாவளி ஊக்கத் தொகையை அமைப்பு சாரா மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கும் சமமாக வழங்க வேண்டும் என்று புதுச்சேரி அரசை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக, புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: –

புதுச்சேரி மாநிலத்தில் வாழ்ந்து வரும் தொழிலாளர்களில் 80 சதவீதத்தினர் அமைப்பு சாரா தொழிலாளர் பிரிவை சேர்ந்தவர்கள். கடை பணியாளர்கள், சிறு தொழில் பணியாளர்கள், வீட்டு பணியாளர்கள், ஓட்டுநர்கள், தையல் கைவினைஞர், கைத்தறி நெசவாளர், மண்பாண்டத் தொழிலாளர், சமையல், சாலையோர வியாபாரிகள் இப்படி 26 க்கும் மேற்பட்ட தொழில் பிரிவினர் இதில் இணைந்திருக்கிறார்கள். அவர்களின் பணிதான் மாநில மொத்த உற்பத்தியில் பெரும் பகுதியை ஈட்டி பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கிறது.

இ வ ர் க ள் பல் வே று முதலாளிகளிடம் வேலை செய்தாலும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்து வதற்கு அரசு துணை நிற்க வேண்டும். உலக தொழிலாளர் நிறுவனம் இவர்களின் சமூக பாதுகாப்பிற்கு வேண்டிய திட்டங்களை அந்தந்த அரசுகள் செயல்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் தான் ஒவ்வொரு நாட்டிலும் அல்லது மாநிலத்திலும் தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் துவக்கப்பட்டு அவர்களுக்கான சமூக நலத்திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதுச்சேரி அரசு இன்று நடத்தி வரும் அமைப்புசாரா தொழிலாளர் வாரியம், கட்டுமான தொழிலாளர் வாரியம், விவசாய நலச்சங்கம் இவை அனைத்தும் இதன் பின்னணியில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்வைத்து கட்டுமான தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 5 ஆயிரமும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ரூ. ஆயிரத்து 500–ம் புதுச்சேரி அரசு வழங்கியது. இந்த வேறுபாடு கூடாது என்றும், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே தொகை ரூ. 5 ஆயிரம் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் ஊக்கத் தொகையாக வழங்க வேண்டும் என்று பல்வேறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை வைத்தன. அன்றைக்கு ஆட்சியாளர்கள் கட்டுமான தொழிலாளர்களின் நிறுவனம் வாரியம் என்றும் வாரியத்திற் கான நிதியாக மாநிலத்தில் கட்டப்படுகின்ற அனைத்து கட்டிடங்களுக்கும் ஒரு சதவீத செஸ் வரி விதித்து அந்த தொகையில் இருந்து வழங்குவதாகவும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வாரியம் இல்லாமல் நலச்சங்கம் செயல்பட்டதால் அதற்கான நிதி ஆதாரம் இல்லை என்று பதிலளித்தது.

இன்று அமைப்பு சாரா நல சங்கம் என்பது வாரியமாக மாற்றப்பட்டுள்ளது. ஆகவே, அதனடிப்படையில் இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை கால ஊக்கத் தொகையை கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்க இருக்கின்ற ரூ. 6 ஆயிரம் நிதியை அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும். எதிர்காலத்தில் இதற்காக தனியாக நிதியை உருவாக்குவது என்றால் புதுச்சேரியில் உள்ள மதுபான விற்பனை, பெட்ரோல், டீசல் விற்பனை போன்றவற்றில் ஒரு சதவீதம் செஸ் வரியை விதித்து அதற்கான நிதியை உருவாக்கலாம் என்ற ஆலோசனையை அரசுக்கு முன்வைக்கிறேன். தற்பொழுது கோடிக்கணக்கான ரூபாய் கட்டுமான நல வாரியத்தில் சேமிப்பாக உள்ளதை கடனாக பெற்றாவது அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் ரூ. 6 ஆயிரம் பண்டிகை கால போனஸ் வழங்க வேண்டும் என்று புதுச்சேரி அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய தொழிலாளர் நல சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 5 ஆயிரம் கொடுப்பதாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு முதல்வர் சட்டசபையில் அறிவித்தார். அந்த அறிவிப்பு இன்று வரை கிடப்பில் உள்ளது. இதனிடையே சென்ற வாரம் வேளாண் அமைச்சர் விவசாய தொழிலாளர்களுக்கு இவ்வாண்டு ரூ. 2 ஆயிரம் தீபாவளி பண்டிகை போனஸ் அளிப்பதாக அறிவிப்பு செய்திருக்கிறார். அதனையும் ரூ. 6 ஆயிரமாக அளித்து விவசாய தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் சிறப்பாக கொண்டாட இவ்வரசு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.


நினைவில் வாழும் திராவிடச் சுடர்
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்

October 13 2025

# பரிதிஇளம்வழுதி



முன்னாள் – கழக துணை பொதுச் செயலாளர்
ஏழாம் ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



எங்களின் அன்பே!
முத்தமிழறிஞர் **தலைவர் கலைஞரின்** இந்திரஜித் வீர அபிமன்யுவாய்,
கழகத் தலைவர் **தளபதியாரின்** உடன்பிறப்பாய்,
தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி
**கழகத் தலைவர்** மற்றும் **இளைஞர் அணி செயலாளர்** தலைமையில்
தொண்டு செய்வோம் என்றும் கழக தொண்டனாக.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**பரிதிஇளம்சுருதி** B.C.A.,M.A.,L.L.B.,
கழக அயலக அணி மாநில துணை செயலாளர்
எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர்
**குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.**

### தங்க முதலீட்டுத் திட்டத்தின் மூலம்

# 21 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் வட்டித்தொகையாக ரூ.17.76 கோடி கிடைக்கிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

காஞ்சிபுரம், அக்.13-

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜூ முன்னிலையில் நேற்று (12.10.2025) காஞ்சிபுரத்தில், காஞ்சி காமாட்சியம்மன் திருக்கோயில், குன்றத்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவிடந்தை, நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயில், திருமலைவையாவூர், பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் ஆகிய 4 திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பிரித்தெடுக்கப்பட்ட 53 கிலோ 386 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் காஞ்சிபுரம் மண்டல மேலாளர் செந்தில்குமார் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில்களில் ஒன்றனான காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் மரக்கன்றினை நட்டுவைத்து, அத்திருக்கோயிலில் ரூ. 29 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு, குடமுழுக்கு நடத்திடும் வகையில் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.


பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், ஆன்மிகவாதிகளின் பொற்காலம் என போற்றும் வகையில் இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு முனைப்பான திட்டங்களை செயல்படுத்தி, ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடைபெற வேண்டிய திருக்கோயில்களை கணக்கிட்டு இதுவரை 3,707 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. மன்னர்கள் மற்றும் நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற பொக்கிஷங்களாக திகழும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களை பாதுகாக்கின்ற வகையில் அவற்றை புனரமைக்க இதுவரை ரூ. 425 கோடியினை அரசு நிதியாக வழங்கியவர் நமது முதலமைச்சர் ஆவார். அரசு நிதி, திருக்கோயில் நிதி, உபயதாரர் நிதியின் மூலம் இதுவரை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட 68 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் 2021 - 22 ஆம் நிதி யாண்டில் 112 அறிவிப்புகள், 2022 - 23 ஆம் நிதியாண்டில் 165 அறிவிப்புகள், 2023 - 24 ஆம் நிதியாண்டில் 249 அறிவிப்புகள், 2024 - 25 ஆம் நிதி யாண்டில் 108 அறிவிப்புகள், 2025 - 26 ஆம் நிதியாண்டில் 210 அறிவிப்புகள் என இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு மொத்தம் 844 அறிவிப்புகளை வெளியிட்டு, அதில் 65 சதவீத அறிவிப்புகளை நிறைவேற்றி உள்ளோம்.

திருக்கோயில்களில் பக்தர்களிடமிருந்து காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்படுத்த இயலாத பலமாற்று பொன் இனங்களில் கல், அரக்கு, அழுக்கு நீக்கப்பட்டு, மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி, பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திடும் வகையில் ஒய்வு பெற்ற உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு. துரைசாமி ராஜூ, திரு. ரவிச்சந்திர பாபு மற்றும் செல்வி மாலா ஆகியோரின் கண்காணிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், 21 திருக்கோயில்களின் பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கபெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்தத் தங்கக் கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 17 கோடியே 76 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது. இந்த வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, மேலும், 13 திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாடற்ற 378 கிலோ 619 கிராம் 100 மில்லிகிராம் பல மாற்றுப் பொன் இனங்கள் உருக்காலைக்கு கொண்டு செல்ல தயாராக உள்ளன. அவற்றில் இன்றைய தினம் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் திருக்கோயிலிலிருந்து 42 கிலோ 326 கிராம், குன்றத்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலிலிருந்து 2 கிலோ 640 கிராம், திருவிடந்தை, அருள்மிகு நித்திய கல்யாண



பெருமாள் திருக்கோயிலிலிருந்து 4 கிலோ 070 கிராம், திருமலைவையாவூர், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலிலிருந்து 4 கிலோ 350 கிராம் என மொத்தம் 53 கிலோ 386 கிராம் எடையுள்ள பலமாற்றுப் பொன் இனங்கள் இன்றைய தினம் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில்களில் ஒன்றனான காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 19 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட ஏதுவாக அரசு நிதி ரூ.12.75 கோடி, ஆணையர் பொதுநல நிதி ரூ. 8.99 கோடி, திருக்கோயில் நிதி ரூ. 6.84 கோடி, உபயதாரர் நிதி 41 இலட்சம் என மொத்தம் ரூ.28.99 கோடி மதிப்பீட்டில் 38 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 12 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இதரப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளுக்கு முடிக்கப்பட்டு வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் தேதி குடமுழுக்கு நடப்படும். இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த 4 ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு உயதாரர்கள் மட்டும் 11,845 பணிகளுக்கு ரூ. 1,528 கோடியை நன்கொடையாக அளித்துள்ளனர்.

இத்திருக்கோயிலிலுள்ள 1000 கால் மண்டபம் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த நிலையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் திறக்கப்பட்டது. அதில் தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்து குடமுழுக்கிற்கு பின் பக்தர்கள் சென்று வர அனுமதிக்கப்படும். சாய்ந்த நிலையில் உள்ள முன் கோபுரத்தை புதிதாக கட்டுவதா அல்லது பழுது நீக்கி புனரமைப்பதா என்பதனை மாநில வல்லுநர் குழுவின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பௌர்ணமி மண்டபத்தினை புனரமைக்க ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இந்த இரண்டு பணிகளும் குடமுழுக்கிற்கு பின் மேற்கொள்ளப்படும். இத்திருக்கோயிலின் திருப்பணிகளை விரைவுபடுத்தும் வகையில் தலைமையிடத்திலிருந்து இணை ஆணையர் திருமதி வான்மதி அவர்கள் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட உள்ளார்.

ஏழை, எளிய மக்கள் குடியிருக்கும் திருக்கோயில் குடியிருப்புகளை அவர்களது வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் வாடகையை வசூலிக்கும் முறையை பின்பற்றி வருகிறோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட அரசாணையின்படி, குழுவாக ஒரு இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்தால் அதனை முறைப்படுத்திட வேண்டும். அந்த ஆணையின்படி 10,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். நியாய வாடகை குழு முடிவின்படி நியாயமான வாடகை நிர்ணயம் செய்து திருக்கோயிலுக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் வழிவகை காணப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த வாடகை தொகை ரூ. 650 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள திருக்கோயில்களை சுற்றி வாகனங்களை நிறுத்தி வைத்திருப்பதை முறைப்படுத்தி, நிரந்தர தீர்வுக்கு வழி காணப்படும். நங்கநல்லூர் ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு ரூ. 9 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வரும் தங்கத்தேர் வரும் ஜனவரி மாதத்திற்குள் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்திட வெள்ளோட்டம் விடப்படும். அதேபோல் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் தங்கத் தேரினை அறங்காவலர் குழுத் தலைவர் வேல்மோகன் முழு முயற்சி எடுத்து வெள்ளோட்டத்திற்கு கொண்டு வருவார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் திருமதி எம்.மகாலெட்சுமி, இணை ஆணையர்கள் திருமதி இரா வான்மதி, சி.குமரதுரை, துணை ஆணையர்கள் திருமதி கே. சித்ராதேவி, திருமதி ஆர். ஜெயா, உதவி ஆணையர்கள் ஆர். கார்த்திகேயன், திருமதி ஆர். ராஜலட்சுமி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் தெற்கு பகுதி 41வது வட்ட தி.மு.க சார்பில், கழக செயல்வீரர்கள் கூட்டம் வட்டக் கழகச் அவைத்தலைவர் ஐ.சாமிக்கன்னு தலைமையில், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார், உடன் பகுதி செயலாளர் இரா சுரேஷ், எஸ்.கற்பகம் சுரேஷ் எம்.சி., எம்.பி.மணியன் (எ) பாலு, தா. தட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. மனோகரன்
### அக்டோபர் 13 (2020)



**1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.**

**1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்கு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**